
# அன்பு மக்களே!

தமிழ் கத்தோலிக்க மாதாந்த வெளியீடு மாசி 2026 ஒளி 32 கதிர் 312
TAMIL CATHOLIC PUBLICATION FEBRUARY 2026 YEAR 32 VOl: 312





## மாசி:

### திருக்குடும்ப மாதம்

### 2026 தவக்கால ஆரம்பம்



கனடா தமிழ் கத்தோலிக்க இணையம்.
CTC NETWORK : https://ctcnw.org/

**ஸ்தாபிதம்**

ஆனி 1995

**முகவரி**

41 EARL STREET, TORONTO. ON.M4Y 1M4
CANADA

Email : tamilcatholicpublication@gmail.com

**தோலை பேசி : +1(647) 852-3141**

**தயாரிப்பு + வெளியீடு**

கனடா தமிழ் கத்தோலிக்க இணையம்

**ஆசிரியர் குழு**

திரு தோமஸ் டேவிட்

சகோ. மரீனா அந்தோனிப்பிள்ளை

**ஆலோசனை குழு**

அருட் தந்தை வார்கீஸ் செல்வராஜா

அருட் தந்தை அந்தோனிப்பிள்ளை தோமஸ்

அருட் தந்தை யூபின் லோரன்ஸ்

**தெழில் நுட்ப உதவி**

திரு மரியதாஸ்

சகோ. மரீனா அந்தோனிப்பிள்ளை

**விநியோகஸ்தர்கள்**

கனடா தமிழ் கத்தோலிக்க இணையம்

தன்னார்வத்தொண்டர்கள்

**கிடைக்கும் இடங்கள்: ரொறொன்ரோ**

புனித அந்தோனியார் தேவயலயம்

புனித லூர்து மாதா தேவாலயம்

புனித ரோசா லீமா தேவாலயம்

புனித பர்னபாஸ் தேவாலயம்

புனித எயார் வேய்ஸ் தேவாலயம்

**மாக்கம்**

தோமாஸ்மோர் தேவாலயம்

போனிபஸ் தேவாலயம்

**டொன்மில்ஸ்**

புனித 23ம் அருளப்பர் தேவாலயம்

தமிழ் கத்தோலிக்க புதுவாழ்வுக்குழு

தமிழ் மொழ் கற்கும் வகுப்புக்கள்

மெக்கா சிற்றி வர்த்தக ஸ்தாபனங்கள்

**ஆதரவு**

கனடா தமிழ் கத்தோலிக்க இணையம்

# 2026ம் ஆண்டு தவக்கால நிகழ்ச்சி நிரல்



தபசு காலத்தில் ஒவ்வொரு புதன் கிழமையும் மாலை 5.45 மணிக்கு தமிழ் சிலுவைப்பாதை “எங்கே சுமந்து போனீர்” என்னும் பாரம்பரிய பாடலுடன் மோட்ச்சபாதையின் வழிகாட்டலில் நடைபெறும்.

**பெரிய வியாழன்**

பெரிய வியாழன் அன்று இரவு 11 மணிக்கு தேவநற்கருணை ஆராதனை லூர்து மாதா ஆலயத்தில் தமிழில் நடைபெறும்

**பெரிய வெள்ளி**
(சிலுவைப்பாதை)

பெரிய வெள்ளி அன்று காலை 8.30 மணிக்கு தமிழ் சிலுவைப்பாதை லூர்து மாதா ஆலயத்தில் நடைபெறும்

**ஞானொடுக்கம்**

பங்குனிமாதம் தவக்காலத்தின் முதற் சனிக்கிழமை 7ம் திகதி தவக்கால ஞானொடுக்கம் தமிழில், மேரிலேக்கின் குழுவினரால் தலைமைதாங்கி நடாத்தப்படும்.

**மேரி லேக் திருவழா:** இந்த வருடம் மேரி லேக் திருவழா நடைபெறாது. அடுத்த வருடத்திலிருந்து நடைபெறும்.

**அன்பு மக்களே மாதாந்த சஞ்சிகையை பெற விரும்புவோர் பின்வரும் தொலைபேசி எண்ணுக்கு தொடர்புகொள்ளவும்.**

**தொ. எண் :+1(647) 852-3141 (வருடம் முழுவதற்குமான சஞ்சிகையை பெறுவோருக்கு விசேட சந்தா சலுகை உள்ளது**

**கனடா தமிழ் கத்தோலிக்க இணையம் (https://ctcnw.org/)**



## ஆசிரியர் இதயத்திலிருந்து

ஆகில உலக தமிழ் மக்கள் அனைவருக்கும் மாசி மாதம் அன்பு மக்களே என்னும் எமது சஞ்சிகையினூடாக உங்களை நாம் தரிசிப்பதில் மிக்க மகிழ்ச்சி அடைகின்றோம். எமது சஞ்சிகையின் பல மாற்றங்களை நீங்கள் கடந்த சில சஞ்சிகையிலே பார்க்க கூடியதாக அமைந்திருக்கும். சில குறிப்புக்கள் நாங்கள் அதிலே இட்டிருக்கின்றோம் என்பதும் உங்கள் எல்லோருக்கும் தெரியும். எமது திரு அவை மாசி மாதத்தை திருக்குடும்ப மாதமாக ஆண்டுதோறும் நினைவுகூர்ந்து, கத்தோலிக்க குடும்பங்கள் திருக்குடும்ப மாதிரியை அடியொற்றி வாழ அழைக்கின்றது.

***“படைக்கின்றவன் படைக்கின்றான் படைப்புகளை படைக்கப்பட்ட படைப்புகள் படைக்க வேண்டும் படைத்தவனுக்காக”*** என்கின்ற பண்பு முறையோடு இந்த உலகத்திலே குடும்பங்கள் உருவாக்கப் பட்டிருக்கின்றன. குடும்ப வாழ்க்கையிலே கடவுள் தான் படைத்தது போல, அவர்களும் படைக்க வேண்டும். அவைகளை பண்படுத்த வேண்டும், பண்படுத்தப்பட்ட படைப்புக்கள் மீண்டும் படைத்தவனுக்காக படைக்க வேண்டும் என்கின்ற இயல்போடு வாழ வேணுமென்று அழைப்பு விடுத்திருக்கின்றான் இறைவன்.

உலகில் வாழும் உயிர்கள் அனைத்திற்கும் இன்றியமையாதது குடும்பமே. இஸ்ராயேல் வாழ்க்கையிலே புனித குடும்பமாக உருவாக்கப்படிருந்த சூசையப்பரும் தேவமாதாவும் மகனைப் பெறுவதற்காக குடும்பமாக பெத்தலகேமுக்கு அழைப்பு விடப்பட்டு, உலகினுடைய மாற்றத்தை ஏற்படுத்துகின்ற உன்னதரை வரவேற்பதற்கு குடும்பமாக சென்றார்கள். இந்த வேளையில், கனடாவிலே வேறு மாநிலங்களை விட, முக்கியமாக ஒன்ராரியோ மாநிலத்திலே, குடும்ப நாளை ஒரு குடும்ப மாதமாக கொண்டாடுவதற்கு அனுமதியளித்து, அவர்களின் குடும்ப உறவு முறைகளை பேணிப் பாதுகாப்பதற்கு அரசாங்கம் அங்கிகாரமளித்து, அவர்களுக்கு ஆதரவு வழங்குகிறது. அது போன்று கத்தோலிக்க திருச்சபையினுடைய வெவ்வேறு திருவிழாக்கள் முக்கியமாக கடந்த கிறிஸ்மஸ் திருவிழா கூட ஒரு குடும்ப திருவிழாவாக உலகம் முழுதும் உள்ள குடும்பங்களின் திருவிழாவாக மாற்றப்பட்டு கொண்டாடப்படுகின்றது. அதே போன்று இந்த மாதத்திலே ஆரம்பிக்கப்பட்டிருக்கின்ற தவசு கால வாழ்க்கையிலே இறைவன் இயேசு உண்மையாகவே எங்களை எதற்கு அழைக்கின்றான். எவ்விதமான வாழ்வு முறையை நாம் தொடர வேண்டுமென்று விரும்புகிறார் என்று சிந்திப்பதற்கும் இறைவன் இயேசு எங்களோடு மிக அருகாமையில் பிரசன்னமாய் இருக்கிறார் என்பதை உணருவதற்கும் எங்களுடைய வாழ்வு முறையிலே நாங்கள் எவ்விதம் நடந்து கொண்டிருக்கிறோம் என்பதை பற்றியும் கடந்த 2000ம் ஆண்டுகளுக்கு முன்பு நடந்த சம்பவங்களை நாம் நினைவிற்கு கொண்டு வந்து அவைகளினுடைய இயல்பு முறைகளை நாம் இதய பூர்வமாக ஏற்று வாழ்வதற்கு அல்லது அவற்றை இதய பூர்வமாக நாம் ஒத்து கொண்டு செயல்படுத்துவதற்கு நாம் தயாராக இருக்கவும், அதனூடாக உண்மையாகவே நாம் அந்த தயாரிக்கப்பட்ட பலவிதமான நடவடிக்கைகளிலே பங்கு கொண்டு எமது மாற்றங்களை நாம் உடல் ரீதியாகவும் உள ரீதியாகவும் நாம் அந்த ஞானம் என்கின்ற அறிவாற்றலோடு அறிவு. ஆன்மீகம் பெறுகின்ற அந்த அறிவாற்றலோடு நமது வாழ்வியல்புகளை இறை இயேசுவோடு இணைந்து வாழ்வதற்கு நாம் தகுதி பெற்றவர்களாக வாழ அழைக்கப்படுகின்றோம். கிறிஸ்துவினுடைய வாழ்க்கையை செம்மறிப்புருவையே என்று அழைக்கின்ற இயல்பை ஒத்தவர்களாக நாம் வாழ்ந்து காட்டுவதற்கு இயேசுவைப்போல நாம் ஒரு செம்மறிப்புருவையாக நம்மை ஆயத்தப்படுத்துகின்றோமா என்றும், மற்றவர்கள் எங்கள் மத்தியிலே செலுத்துகின்ற குற்றங்களை ஏற்று அவைகளை நாம் மௌனமாக மரணிக்கும் வரை நாம் இயேசுவினுடைய பாதையில் சென்று பார்ப்பதற்கு உரியவர்களாக இருக்கின்றோமா என்பதையும் நம் ஆண்டவர் எம்மிடம் கேட்கின்றார்.

இஸ்ராயேல் மக்கள் தமது பாவங்கள் நீங்கி பரிசுத்தமாய் வாழ, அவர்கள் தமது பாவங்களை ஓதி, பாலைவனவிற்கு துரத்திவிடும் செம்மறியாட்டைப்பொல, கிறிஸ்துவும் நம் அனைவரது பாவங்களையும் தன் மீது தாங்கி, பலியாகி எமக்கு புதுவாழ்வு தந்தார். ஆனால் இன்று பாவங்கள் அதிகரித்து, போர்களும் வன்முறைகளும் தலைதூக்கி, மனித உயிர்கள் காவுகொள்ளப்படும் அவல நிலை கிறிஸ்து இயேசுவின் தியாக அன்பை மறுதலிப்பதை காட்டுகின்றது. முழு உலகமும் மனமாற்றம் பெற்று கிறிஸ்துவில் புதுப்படைப்புக்களாக மாற இத்தவக்காலத்தில் ஜெபிப்போம்

அன்பின் டேவிட் தோமஸ்






## மாசி மாதம்
## திருக்குடும்ப மாதம்

கத்தோலிக்க பாரம்பரியத்தில், மாசி மாதம் இயேசு, அன்னை மரியாள் மற்றும் புனித சூசை ஆகியோரின் திருக்குடும்பத்திற்கு அர்ப்பணிக்கப்பட்டுள்ளது, திருக்குடும்பத்திற்கான பக்தி இந்த மாதம் முழுவதும் திருக்குடும்பத்தை கௌரவிப்பதற்காக அர்ப்பணிக்கப்பட்டுள்ளது இது ஒரு குடும்ப வாழ்க்கை, அதில் கீழ்ப்படிதல் மற்றும் நம்பிக்கை ஆகியவற்றில் நாம் சிறந்தோங்கி வழர நம்மை அழைத்து நிற்கின்றது. இது நாசரேத்தின் அமைதியான, அன்றாட மற்றும் பணிவான வாழ்க்கையைப் பற்றி சிந்திக்க வேண்டிய மாதம்.

**காணிக்கைத் திருவிழா (மாசி 2):** இதனை மெழுகுவர்த்தி விழா என்றும் அழைப்பர். இயேசுவின் காணிக்கைத் திருவிழா கிறிஸ்துமஸ் ஒளியின் மறைபொருளை நினைவூட்டுகிறது, அதாவது காணிக்கையாக ஒப்புக்கொடுக்கப்பட்ட குழந்தை இயேசு, புறவினத்தவருக்கு வெளிப்படுத்தலின் ஒளி, அவர் தம் மக்களை அவர்களின் பாவங்களிலிருந்து காப்பாற்றுவார். இவ்வாறு ஒளியான இயேசுக் கிறிஸ்துவை அடையாளப்படுத்தும் மெழுகுவர்த்திகளையே, நாம் உயிர்ப்பு நாள் திருவிழிப்பு வழிபாட்டின் போது பாஸ்கா மெழுகுவர்த்தியைப் போலவே, நாம் இந்நாளில் ஊர்வலமாக எடுத்துச் செல்லுகின்றோம்.

திருநீற்று புதன்கிழமையில் ஆசீர்வதிக்கப்பட்ட சாம்பலின் சிலுவையை ஏற்றுக்கொள்ளவும், தவக்காலத்தின் முக்கிய பயிற்சிகளான உபவாசம், பிரார்த்தனை, தானம் பேன்றவற்றை ஏற்று நிறைவேற்றவும் நாம் நம்மை அர்ப்பணிக்கின்றோம். நமது தாய் மரியாளின் இதயத்தில் நம் எண்ணங்களையும் பிரார்த்தனைகளையும சமர்ப்பிப்போம். தேவாலயத்திலும் சிலுவையிலும் தனது மகனை காணிக்கையாக பலியிட்ட அவர், நம்மை எப்படி நினைக்க மறப்பார். தினமும் நாம் நமது அன்றாட சிலுவைகளை மகிழ்ச்சியோடு ஏற்று வழிநடக்கவும், தனது மகனைப் சரியாக பின்பற்றவும் நமக்குக் கற்றுத்தருவார்.

குடும்பத்திருச்சபை உறுப்பினர்கள் தங்கள் குடும்ங்களுக்கு தேவையான மெழுகுவர்த்திகளை மெழுகுவர்த்தி தினத்தன்று ஆசீர்வதித்துப் பெற்றுக்கொள்ள முயற்சிக்கவேண்டும்.

**புனித பிளேஸ் (மாசி 3):** மறுநாள் காலை, மூச்சுத் திணறல் ஏற்பட்ட குழந்தையை இத்துறவி குணப்படுத்தியதைக் கௌரவிக்கும் வகையில் தொண்டைகளை ஆசீர்வதிப்பது வழக்கம். புனித பிளேசியின் திருநாளன்று, அனைவரும் தொண்டையின் ஆசீர்வாதத்தைப் பெறலாம்.

**லூர்து அன்னை திருநாள் (மாசி 11):** பிரான்ஸ் லூர்துபதியில் பரிசுத்த கன்னி மரியாளின் தோற்றத்தைக் குறிக்கும் பண்டிகை நாள். அன்றைய நாளில் நோயுற்றோருக்கான உலக ஜெப தினத்தையும் நமக்கு தந்துதவுகிறது.

**முக்கிய புனிதர்கள்:** புனித ஸ்கொலஸ்றிக்கா (பிப்ரவரி 10), புனித சிரில் மற்றும் மெதோடியஸ் (பிப்ரவரி 14) மற்றும் மரியாளின் ஊழியர்களின் ஏழு நிறுவனர்கள் (பிப்ரவரி 17) ஆகியவை பிற குறிப்பிடத்தக்க விழாக்களில் அடங்கும்.

**தவக்கால மாற்றம்:** வழிபாட்டு நாட்காட்டி, மாசி மாதம் தவக்காலத்தின் ஆன்மீக, ஆயத்த தொடக்கத்தைக் குறிக்கிறது, மாசி மாதத்தை சில சமயங்களில் “பால (BRIGDE)” மாதமாகவும் கருதப்படுகிறது, இந்த மாதத்தில் விசுவாசிகள் தவக்கால பருவத்தின் தீவிர பிரார்த்தனை மற்றும் உபவாச வாழ்விற்காக தயாராகிறார்கள். இந்த வருடம் 2026, 18ம் திகதி விபூதி புதனுடன் தவக்காலம் ஆரம்பமாகின்றது. கனடா தமிழ் கத்தோலிக்க இணையத்தள பங்குனி மாத 'அன்பு மக்களே சஞ்சிகை தவக்கால ஆன்மீகத்தோடு வெளிவரும் (அன்பின் டேவிட் தோமஸ்)




# காணிக்கை மாதா பெருவிழா

இன்று திருஅவை அன்னை மரியாளின் காணிக்கை திருவிழாவைக் கொண்டாடுகின்றது. இயேசுவின் பிறப்பிற்குப் பின், திருச்சட்டப்படி அவரை எருசலேம் கோவிலில் காணிக்கையாக அர்ப்பணிக்க அன்னை மரியாள் சென்றார். இந்த நிகழ்வு, இயேசுவே உலகின் ஒளி என்பதை உணர்த்துகிறது.

சீமோன் என்னும் இறைவாக்கினர், இயேசுவை புற இனத்தாருக்கு ஒளிதரும் விளக்கு என்று போற்றியதை நாம் நற்செய்தியில் காண்கிறோம்.

இறைவனை காணிக்கை செலுத்த கோவிலுக்குள் நுழைவதற்கு முன்பு பரிசுத்த குடும்பம் தங்கள் தயாரிப்புகளையும் சுத்திகரிப்புகளையும் செய்தது. நமது சொந்த ஆலயங்களில் இறைவனைப் பெற நாம் எவ்வாறு நம்மைத் தயார்படுத்திக் கொண்டு சுத்திகரிக்க முடியும்? பின்னர் புதிதாக மெருகூட்டப்பட்ட அல்லது சுத்திகரிக்கப்பட்ட வெள்ளியைப் போல கிறிஸ்துவின் அழைக்கப்பட்ட விருந்தினருக்கு நம்மைக் காட்ட அந்த சுத்திகரிப்பு செயல்முறை எவ்வாறு உதவும். நம் வாழ்வில் களங்கம் படிந்த பகுதிகள் எங்கே: பெருமை சுயநலம் இரக்கமற்ற செயல்கள், உடைந்த உறவுகள் தப்பெண்ணம் அநீதி நமது சொந்த விளக்கக்காட்சி முழுமையடைய என்ன செய்ய வேண்டும் என்பதை சிந்திப்போம். சிமியோன் மற்றும் அன்னாளைப் போல, கிறிஸ்துவை நம் வாழ்வில், நம் கைகளில் ஏற்றுக்கொண்டு, பின்னர் நம்மைச் சுற்றியுள்ளவர்களுக்கு, வார்த்தையிலோ அல்லது செயலிலோ, இரட்சிப்பு நமக்கும், உலகத்திற்கும் வந்துவிட்டது என்று அறிவிக்க முடியுமா? அதாவது, கிறிஸ்துவில், நம் பாவத்தின் ஒடுக்குமுறையிலிருந்து நாம் காப்பாற்றப்பட்டோம் என்று அறிவிக்க முடியுமா? வெள்ளியை மெருகூட்டினால் சுத்திகரிக்கக்கூடிய ஒருவராக, நம்மை நாமே சுத்திகரிக்க முடியாது என்பதை நாம் அறிவோம். கடவுளின் பரிசாகிய இரக்கம் மட்டுமே நம்மை சுத்திகரித்து, நம் சொந்த விளக்கக்காட்சிக்குத் தயாராக இருக்க அனுமதிக்கிறது. எனவே, அந்த சுத்திகரிக்கும் இறைவனின் இரக்கத்தை நம் வாழ்வில் பெற நாம் திறந்த புத்தகமாக இருக்க வேண்டும்.

இத்திருவிழா நமக்கு அளிக்கும் செய்தி: தூய்மை: அன்னை மரியாளின் தூய்மை.

அர்ப்பணம்: நம் வாழ்வை, நம் குடும்பங்களை, நம் குழந்தை இயேசுவிடம் காணிக்கையாக்குதல்.

ஒளி: நம் வாழ்வில் உள்ள இருள்களை நீக்கி, இயேசுவை ஒளிமயமான வாழ்வாக ஏற்று வாழ்தல்.

தூய காணிக்கை அன்னை என்று அழைக்கப்படும் நம் தாயின் பரிந்துரையால், நாமும் நமது அன்றாட வாழ்வு, பணிகள் மற்றும் துன்பங்களை இறைவனின் கைகளில் ஒப்படைத்து, அர்ப்பண வாழ்வு வாழ வரம் வேண்டுவோம். அன்னை மரியாளின் ஆசீர் நமக்கு என்றும் இருக்கும் என்று நம்புவோம்.

அருட்பணி குயின்ரஸ்




## திருக்குடும்ப விழா தரும் அழைப்பு

புனித சூசையப்பர், அன்னை மரியாள், எமது ஆண்டவர் இயேசு இவர்களைக் கொண்ட திருக்குடும்பம் அமைதியாகவும் பணிவாகவும் நாசரேத்தில் வாழ்ந்து வாழ்ந்தது. நாசரேத்தில் எந்த பெரிய அற்புதங்களும் பதிவு செய்யப்படவில்லை, பொதுப் போதகமும் இல்லை, கூட்டமும் இல்லை - தினசரி வேலை, பிரார்த்தனை, தியாகம் மற்றும் அன்பு மட்டுமே அக்குடும்பத்தில் இருந்தது. இருப்பினும், கடவுள் வசிக்கத் தேர்ந்தெடுத்தது இந்த சாதாரண சூழலில்தான். பரிசுத்தம் என்பது அசாதாரண செயல்களில் மட்டுமல்ல, அன்றாட, சாதாரண குடும்ப வாழ்க்கையில், கடமைகளில் பொறுப்புக்களில் பிரமாணிக்கமாக இருப்பதில் அடங்கியிருக்கின்றது என்பதை திருக்குடும்ப விழா நமக்கு நினைவூட்டுகிறது: ஒருவருக்கொருவர் அக்கறை காட்டுதல், சோதனைகளின் மூலம் விடாமுயற்சியுடன் இருத்தல் மற்றும் அமைதியாக கடவுளை நம்புதல இதில் அடங்கும்.

இந்த மாதம் நவீன குடும்பங்களின் யதார்த்தத்தையும் வலுவாகப் பேசுகிறது. பரிசுத்த குடும்பம் வறுமை, இடப்பெயர்ச்சி, பயம், தவறான புரிதல் மற்றும் எதிர்காலத்தைப் பற்றிய நிச்சயமற்ற தன்மை ஆகியவற்றை அறிந்திருந்தது. அவர்கள் எகிப்துக்கு அகதிகளாக ஓடி, அன்றாட உணவுக்காக உழைத்து, கடவுளின் மறைவான சித்தத்திற்குக் கீழ்ப்படிந்து வாழ்ந்தனர். மாசி மாதத்தை பரிசுத்த குடும்பத்திற்கு அர்ப்பணிப்பதன் மூலம், திருச்சபை இன்று குடும்பங்களை நாசரேத்தில் பிரதிபலிக்கும் சவால்களை எதிர்கொள்ள நமபிக்கையோடு வாழ அழைக்கிறது.

ஆன்மீக ரீதியாக, மாசி மாதம் குடும்பங்கள் ஒன்றாக ஜெபத்தில் வளர ஊக்குவிக்கிறது. குடும்பத்தில் ஜெபமாலை ஜெபிப்பது, குடும்பமாக வேதாகமத்தை வாசிப்பது, நன்றியுடன் உணவைப் பகிர்ந்து கொள்வது, ஒருவருக்கொருவர் ஆசீர்வதிப்பது போன்ற எளிய நடைமுறைகள் திருக்குடும்பத்தின் உணர்வைப் பிரதிபலிக்கின்றன. தந்தைமையின் முன்மாதிரியாகவும், வீட்டின் பாதுகாவலராகவும் இருக்கும் புனித சூசையப்பரையும், மனத்தாழ்மை, செவிசாய்த்தல் மற்றும் கடவுள் மீது நம்பிக்கை வைப்பதைக் கற்பிக்கும் பரிசுத்த கன்னி மரியாளையும் கௌரவிக்கும் நேரமும் இதுவாகும்.

குடும்ப வாழ்க்கை பெரும்பாலும் பிரிவினை, பரபரப்பு மற்றும் நிச்சயமற்ற தன்மையால் சவால் செய்யப்படும் உலகில், மாசி மாதம் ஒரு மென்மையான ஆனால் சக்திவாய்ந்த நினைவூட்டலாக நிற்கிறது: குடும்பம் புனிதமானது. கிறிஸ்து குடும்த்தின் மையத்தில் இருக்கும்போது, மிகவும் சாதாரண வாழ்க்கை கூட பரிசுத்தத்திற்கான பாதையாக மாறும என்னும் மாதம் இந்த மாதம்.

இந்த மாதம், நமது கத்தோலிக்க குடும்பங்கள் சிறிய நாசரேத்தவர்களாக மாறவும், அன்பு, நம்பிக்கை, தியாகம் மற்றும் அமைதியின் உறைவிடங்களாக உருவாகவும் இறைவன் ஒவ்வொரு நாளும் திருக்குடும்பத்தின் முன்மாதிரியின் மூலம் நிறைத்து ஆசீர்வதிக்கப்பட அழைக்கின்றது.

அருட் பணி. தோமஸ் அந்தோனிப்பிள்ளை (OMI)




கடவுள் நோவா காலத்தின்போது, பாவம் செய்த மக்களை தண்டிக்க 40 நாள்கள் இரவும் பகலும் பூமியின் மேல் மழைபொழியச் செய்தார். இஸ்ராயேல் மக்களின் மனமாற்றத்திற்காகவும் கடவுளின் அருளைப் பெறுவதற்காகவும் மோசே மற்றும் எலியா இருவரும் 40 நாட்கள் தங்களை வருத்தி உண்ணா நோன்பிருந்தனர். இஸ்ராயேல் மக்கள் தங்களது பாவத்திற்குப் பரிகாரமாக 40 ஆண்டுகள் கானான் நாட்டிற்குச் செல்வதற்காக பாலைவனத்தில் அலைந்து திரிந்தனர். இயேசு தனது பணிவாழ்விற்குள் நுழையும் முன் 40 நாட்கள் உண்ணா நோன்பிருந்து பாலைவனத்தில் அலகையினால் சோதிக்கப்படுகின்றார். ஆக 40 என்ற எண் முழுமையின் அடையாளமாகவும் மனமாற்றத்திற்கான காலமாகவும் கருதப்படுவதால் தவக்காலத்தையும் நாற்பது நாள்களாக சிறப்பிக்க திருஅவை நமக்கு அழைப்பு விடுக்கின்றது. இயேசுவைப் போலவே நாமும் நாற்பது நாட்கள் இறைவனைப் பற்றி சிந்திக்கவும், அவர் நம் உடன் இருக்கின்றார் என்பதை உணரவும், நமக்கான கடவுளின் திட்டம் என்னவென்று சிந்தித்து நம்மை நாமே கேள்விக்குட்படுத்தவும், அதை அமைதியுடன் வரவேற்கவும் இத்தவக்காலத்தில் அழைக்கப்படுகின்றோம். கடவுள் நமக்குள் இருந்தால், நம் வாழ்வின் ஒவ்வொரு கணமும் அவருடைய விருப்பத்தின்படி நாம் வாழுவோம். தவறு செய்வது மனித இயல்பு அதிலிருந்து மாற்றியமைக்க அழைக்கப்படுகின்றோம்.

எண்ணங்களுக்கும் இயேசு கிறிஸ்துவின் எண்ணங்களுக்கும் இடையே உள்ள தூரத்தை சிறிதளவாவது குறைக்க இந்த தவக்காலத்தில் அழைக்கப்படுகின்றோம். கிறிஸ்துவுடனான நமது வாழ்க்கை எவ்வளவு உண்மையானது என்பது பற்றி சிந்தித்துப் பார்ப்போம். திருஅவை தனது பிள்ளைகளாகிய நம் அனைவரையும் மனமாற்றத்தின் பாதையில் முன்னேற வேண்டும் என்ற உறுதியான நோக்கத்துடன் தவக்காலத்தை சிறப்பிக்க அழைக்கிறது. இயேசுவின் ஆன்மிக ஞானம், உள்ளார்ந்த செபம், அமைதி, நோன்பு, ஒற்றுமை, பகிர்வு போன்ற பண்புகளில் நாம் வளரவேண்டும். நமது புலன்களை அதன் இச்சைகளைக் கட்டுப்படுத்தி இறைவனே எல்லாவற்றுக்கும் மேலானவர், அவர் ஒருவர் மட்டுமே நமக்குப் போதும் என்று நாம் உணரவேண்டும். கடவுள் நம்மை அளவுக்கதிகமாக அன்பு செய்கின்றார் என்பதை உணர்ந்து கடவுள் நம்மேல் காட்டிய இரக்கத்தையும் அன்பையும் நாம் நம் உடன் வாழ்பவர்களிடத்தில் காட்ட முயல்வோம். கடவுளுக்கும் மற்றவர்களுக்கும் திறந்த இதயத்துடன் இருக்க முயற்சிப்போம்.

அனுசியா ஜேராச்




**திருத்தந்தை:**

திருத்தந்தை லியோ உக்ரைனுக்கு மனிதாபிமான உதவிகளை அனுப்புகிறார்:

சமீபத்திய ரஷ்ய குண்டுவெடிப்புகளுக்குப் பிறகு உக்ரைனிய ஆயர்களின் வேண்டுகோளுக்கு - 1.17 மில்லியனுக்கும் அதிகமான மதிப்புள்ள இந்த உதவி பதிலளிக்கிறது.

கங்கேரியின் ஜனாதிபதி போப்பைச் சந்திக்கிறார், வத்திக்கானின் அமைதி ஆதரவைப் பாராட்டுகிறார.

கங்கேரியின் ஜனாதிபதி தோமஸ் சுல்யோக் திருத்தந்தையை சந்தித்து, வத்திக்கானின் அமைதிக்கான ஆதரவைப் பாராட்டினார். நமது காலத்தின் மிக முக்கியமான மதிப்பு அமைதி, இது இனி சர்ச்சைக்குரியது அல்ல என்றும் கூறினார்.

திருத்தந்தை கத்தோலிக்கர்கள் தவக்காலத்தின் போது தங்கள் செல்போன்களை அணைத்து அமைதி மற்றும் பிரார்த்தனைக்கு இடமளிக்குமாறு வலியுறுத்தினார்,

திருத்தந்தை போர் அதன் நான்காவது ஆண்டை நெருங்கும் நிலையில் உக்ரைனில் உடனடி போர்நிறுத்தத்திற்கு ஞாயிற்றுக்கிழமை அழைப்பு விடுத்தார்.

திருத்தந்தை, நாம் மனந்திரும்பும்படி "நமது பாவங்களை நாம் அறிக்கையிடவேண்டும்" என சாம்பல் புதன்கிழமை திருப்பலியில் அழைப்பு விடுத்தார்.

திருத்தந்தை ஜூலை 4 ஆம் தேதி முக்கிய புலம்பெயர்ந்தோர் இறங்கும் இடத்தைப் பார்வையிடுகிறார்.

**இந்தியாவில் அமைதி நிலவ கர்தினாலின் விண்ணப்பம்**

கர்தினால் கிரேசியஸ் : ஜவகர்லால் நேரு பல்கலைக் கழகத்தில் நிகழ்ந்த தாக்குதல்கள் பெரும் கவலையை உருவாக்குகின்றது

ஜெரோம் லூயிஸ் - வத்திக்கான் செய்திகள்

**போதைப்பொருள் கும்பல் வன்முறை அலைக்கு மத்தியில்** மெக்சிகோவில் உள்ள தேவாலயம் நமது அன்னையின் பாதுகாப்பை வேண்டிக்கொள்கிறது

**புனித பிரான்சிஸின் அழியா உடல் :** முதல் முறையாக அசிசீயில் பார்வைக்காக வைக்கப்பட்ட புனித பிரான்சிஸின் அழியா உடலை ஆயிரக்கணக்கான யாத்ரீகர்கள் பார்வையிடுகின்றனர்.

திருத்தந்தை லியோ அழைப்பு : அமெரிக்கா ஈரான் மீது குண்டுவீசிய போது போரின் துயரத்தை நிறுத்துங்கள் என்று திருத்தந்தை அழைப்பு விடுத்தார்.

மனித கண்ணியம் ஆபத்தில் இருக்கும்போது தொலைதூர மோதல் இல்லை என்று திருத்தந்தை லியோ ஈரானில் அமெரிக்கா இலக்குகளை குண்டுவீசிய பிறகு, நண்பகல் மூவேளை ஜெபத்திற்காக வத்திக்கானில் கூடியிருந்த ஆயிரக்கணக்கான மக்களிடம் கூறினார்.

கனடா திருஅவை செய்தி : 2025-2026ல் கனடா கத்தோலிக்க திருஅவை திருத்தந்தை பிரான்சிஸின் மறைவுக்குப் பின் புதிய தலைமை உள்நாட்டு மக்களுடனான (Indigenous) நல்லுறவு மற்றும் ஆலயங்களில் சீர்திருத்தங்கள் ஆகியவற்றில் கவனம் செலுத்துகிறது. கனடாவில் கத்தோலிக்க நம்பிக்கையை வலுப்படுத்தவும் சமூக நீதி மற்றும் பூர்வகுடி மக்களுடன் இணக்கமான உறவை பேணவும் முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

இலங்கை திருஅவை செய்தி : இலங்கை கத்தோலிக்க திருச்சபை, 2019 ஈஸ்டர் குண்டுவெடிப்பு வழக்கில் உண்மையை கண்டறிய அரசியல் தலையீடற்ற விசாரணைகளை வலியுறுத்தி வருகிறது. அண்மையில் உளவுத்துறை அதிகாரி கைது செய்யப்பட்டதை வரவேற்று நீதிக்காகத் தொடர்ந்து குரல் கொடுத்து வருகிறது. மேலும் புதிய வத்திக்கான் பிரதிநிதியாக ஆண்டகை ஆண்ட்ரெஜ் ஜோஸ்வோவிச் நியமிக்கப்பட்டுள்ளார்.




உக்ரைனில் அமைதி திரும்ப பேராயர் Shevchuk அறைகூவல்!



உலகளாவிய ஆயுதக் குறைப்பிற்குத் திருப்பீடம் அழைப்பு!



உரோமை மறைமாவட்டத்திற்கு நான்கு புதிய துணை ஆயர்கள் நியமனம்!



பாகிஸ்தான் இரமலான் நிவாரணத் திட்டத்தில் கிறிஸ்தவர்கள்!

https://www.vaticannews.va/ta.html

# தவக்கால வரலாறு

தவக்காலம் என்ற ஒன்று எப்படி உருவானது? கிறிஸ்து இயேசு இறந்து உயிர்த்து விண்ணகத்திற்கு எழுந்தருளிச்சென்ற பிறகு, திருத்தூதர்கள் இயேசு தங்களுக்கு விட்டுச்சென்ற பணியினை சிறப்பாகச் செய்தனர். அவரது போதனைகளாலும் நடைமுறைச் செயல்பாடுகளாலும் கவரப்பட்ட அவர்கள், அதனையே தாங்கள் சந்தித்த மக்களுக்கும் எடுத்துரைத்தனர். இயேசு இறந்து, உயிர்த்த, வாரத்தின் முதல் நாளாகிய ஞாயிற்றுக்கிழமையை அனைவரும் ஒன்றாக இணைந்து, கடவுளைப் புகழ்ந்து பாடல்கள் பாடுதல், அப்பம் பிட்குதல் உடைமைகளைப் பகிர்தல் போன்றவற்றின் வழியாக சிறப்பித்தனர். இவ்வாறாக அவரின் இரண்டாம் வருகைக்காக மகிழ்வுடனும் ஆவலுடனும் காத்திருந்தனர் திருத்தூதர்கள். யூதர்களின் ஓய்வு நாளான சனிக்கிழமையை விட ஞாயிற்றுக்கிழமையை வெகுவிமரிசையாக சிறப்பித்தனர். திருத்தூதர்கள் மற்றும் அவர்களைப் பின்பற்றிய சீடர்களின் இறப்பிற்கு பின் கிறிஸ்தவ சமயம் சார்ந்த கருத்தியல்கள் உருவாக ஆரம்பித்தன.

இயேவின் பிறப்பு தொடங்கி அவர் வாழ்வில் நிகழ்ந்த முக்கியமான நிகழ்வுகள் நடைபெற்ற நாள்கள் இறையியல் கண்ணோட்டத்தில் பார்க்கப்பட்டு அவைகளை சிறப்பாக நினைவுகூரும் வழக்கம் உருவானது. தொடர்ந்து ஏற்பட்ட இறையியல் வளர்ச்சியால், யூதர்களின் பாஸ்கா விழாவையொட்டி இயேசு கிறிஸ்துவின் இறப்பையும் உயிர்ப்பையும் நினைவுகூரும் வழக்கமானது இரண்டாம் நூற்றாண்டில் உருவானது. கிழக்கத்திய திருஅவையில் நோன்பிருக்கும் காலமானது மூன்றாம் நூற்றாண்டில் உருவானது. அதன் பின் உயிர்ப்பு பெருவிழாவிற்கு முன் 3 வாரங்கள் ஞாயிற்றுக்கிழமை தவிர்த்து மற்ற அனைத்து நாட்களிலும் ஒருசந்தி அதாவது ஒருவேளை மட்டும் உணவு உட்கொள்ளும் வழக்கமானது உரோம் மற்றும் மேற்கத்திய திருஅவையில் உருவாக ஆரம்பித்தது. நான்காம் நூற்றாண்டில் உரோமப் பேரரசர் கான்ஸ்டாண்டின் நோபில், கிறிஸ்தவ சமயத்துக்கு அனுமதியும் அங்கீகாரமும் அளித்ததைத் தொடர்ந்து, நிச்சேயா திருச்சங்கம் (325) இயேசு 40 நாள் பாலைவனத்தில் உண்ணா நோன்பிருந்ததைச் சுட்டிகாட்டியது. எனவே உயிர்ப்புப் பெருவிழாவிற்கு முன்பு ஆயத்தக் காலமாக 40 நாள்கள் நோன்பிருந்து தவம் மேற்கொள்ள வலியுறுத்தியது திருஅவை. எனவே ஞாயிற்றுக்கிழமை தவிர்த்து வாரத்திற்கு ஆறு நாள்கள் என்ற முறையில் 6 வாரங்கள் தவக்கால நாள்களாகவும், அதற்கு அடுத்த வாரம் புனித வாரமாகவும் அனுசரிக்கப்பட்டது. கிழக்கத்திய திருஅவையினர் சனி ஞாயிறு தவிர்த்து வாரத்திற்கு 5 நாட்கள் என 8 வாரங்களைத் தவக்கால நாள்களாக அனுசரித்து வந்தனர்.

கான்ஸ்டாண்டின் நோபில் பேரரசரின் தாய் ெ□லேனா இயேசு அறையப்பட்ட சிலுவையைக் கண்டெடுத்து ஆலயம் நேர்ந்தளித்தார். அதனைத் தொடர்ந்து எருசலேமிற்கு வரும் திருப்பயணிகளின் எண்ணிக்கையும் ஆரம்பமானது. அதனைத் தொடர்ந்து இயேசு இறந்த நாளான புனித வெள்ளியன்று திருச்சிலுவை ஆராதனையும், பாடுகள் குறித்த திருவழிபாட்டுச் சடங்குகளும் உருவாக ஆரம்பித்தன.

5ம் நூற்றாண்டில் வாழ்ந்த தொடக்ககால கிறிஸ்தவர்கள் இயேசு கிறிஸ்துவின் உயிர்ப்பு பெருவிழாவை மிக சிறப்பாக ஆரவாரத்துடன் கொண்டாடி மகிழ்ந்தனர். அந்நாட்களில், திருமுழுக்கு பெற விரும்புபவர்கள், பெரிய பாவம் செய்தவர்கள் தங்கள் பாவங்களுக்கு பரிகாரம் செய்யும் விதமாக மூன்று நாட்கள் தங்களையே வருத்தி, நோன்பிருந்து, சாம்பல் பூசி தவமிருந்து தங்களைத் தூய்மைப்படுத்திக் கொண்டனர்.

ஆறாம் நூற்றாண்டில், புனித வாரத்தின் முதல் நாள் குருத்து ஞாயிறாகக் கொண்டாடும் வழக்கமானது இஸ்பெயின் நாட்டில் உருவானது. புனித வியாழனில் திருஎண்ணெய்கள் மந்திரிக்கும் திருத்தைல திருப்பலிகளும் கொண்டாட ஆரம்பமாகின. ஏழாம் நூற்றாண்டில் தொலேதோ


சங்கத்தின் விளைவாக ஒரு சில இடங்களில் மட்டுமே நடைபெற்று வந்த பாதம் கழுவும் சடங்கு திருஅவை முழுவதும் செயல்படுத்தப்பட்டது. எட்டாம் நூற்றாண்டில் குருத்தோலை மந்திரிக்கும் வழக்கமும், ஒன்பதாம் நூற்றாண்டில் புனித வியாழன் முதல் புனித சனிக்கிழமை வரையிலான நாள்கள் உயிர்ப்பிற்கான சிறப்பு முன்தயாரிப்பு நாள்களாகக் கருதப்பட்டன. பத்தாம் நூற்றாண்டில் சிலுவையில் அறையப்பட்ட உடலை அதிலிருந்து இறக்கி அடக்கம் செய்யும் (தூம்பா) வழிபாடுகளும் கிபி 1091 ஆம் ஆண்டில் திருத்தந்தை இரண்டாம் உர்பான் அவர்கள் முயற்சியால் தவக்காலத்தின் முதல் நாளானது சாம்பல் புதனுடன் ஆரம்பாகும் வழக்கம் உருவானது. யேசுவின் பாடுகளை 14 நிலைகளில் நினைத்து செபிக்கும் சிலுவைப்பாதை பக்தி முயற்சியானது 1217ஆம் ஆண்டில் தூய பிரான்சிஸ் அசிசியாரால் தொடங்கி வைக்கப்பட்டது.

இப்படியாக படிப்படியாக தவக்காலமும் அதில் நாம் கடைப்பிடித்து வரும் சடங்குமுறைகளும் உருப்பெற ஆரம்பித்தன. உயிர்ப்பு பெருவிழாவிற்கு முன் உள்ள 6 வாரங்கள் பாவம் செய்தவர்கள், மனம் மாற விரும்புபவர்கள் திருஅவையோடும் கடவுளோடும் மீண்டும் நல்லுறவு கொண்டு வாழ வழி செய்யும் விதமாக, தவநாட்களாக சிறப்பிக்கப்பட்டன. இயேசுவின் உயிர்ப்பைக் குறிக்கும் ஞாயிறு தவிர மற்ற நாட்களில் தவம் அனுசரிக்கப்பட்டது. அதன்பின் இரண்டாம் வத்திக்கான் சங்கம் நிகழ்ந்த பின் அதாவது 1962-1965 க்கு பின், பெரிய வியாழனுக்கு முந்திய நாள் வரை நோன்பு தபம் கடைப்பிடிக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டு 40 நாட்கள் தவக்காலமாகக் கருதப்பட்டு வருகின்றது.

அருட் பணி. தோமஸ் அந்தோனிப்பிள்ளை (OMI)




## புனித வெள்ளி அன்று இயேசு சிலுவையில் கூறிய ஏழு வார்த்தைகள்..!



1."பிதாவே இவர்களை மன்னியும், தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியா திருக்கிறார்கள்" (லூக்கா 23:34)

2. "இன்றைக்கே நீ என்னுடனே கூடப் பரலோகத்திலிருப்பாய்" (லூக்கா 23:43)

3."இயேசு தம்முடைய தாயை நோக்கி: அம்மா, அதோ, உன் மகன் என்றார். பின்பு அன்பு சீடரை நோக்கி: அதோ, உன் தாய் என்றார்" (யோவான் 19:26-27).

4."ஏலீ! ஏலீ! லாமா சபக்தானி என்று மிகுந்த சத்தமிட்டுக் கூப்பிட்டார்" ("தந்தையே தந்தையே, ஏன் என்னை கைவிட்டீர்")(மத்தேயு 27:46).

5."நான் தாகமாயிருக்கிறேன்" (யோவான் 19:28)

6."எல்லாம் நிறைவேறிற்று" (யோவான் 19:30)

."பிதாவே, உம்முடைய கைகளில் என் ஆவியை ஒப்படைக்கிறேன்" (லூக்கா 23:46)




## திருநீற்று புதன், நாம் ஆண்டவருடன் திருப்பாடுகளில் பயணம் செய்யும் முதல் நாள்

கடமைக்கான புனித நாள் இல்லையென்றாலும், அது நமது திருச்சபை நாட்காட்டியில் அதிகம் கலந்துகொள்ளும் வழிபாட்டு கொண்டாட்டங்களில் ஒன்றாகும். ஒவ்வொரு ஆண்டும் பயனளிக்கும் மற்றும் மாற்றத்தை ஏற்படுத்தும் தவக்காலத்தை கொண்டாட வேண்டும் என்ற நம் இதயங்களில் உள்ள விருப்பத்தை இது பறைசாற்றுகிறது. இந்த நாற்பது நாட்கள், இயேசுவின் ஞானஸ்நானத்தைத் தொடர்ந்து உடனடியாகவும், அவரது பொது ஊழியத்தின் தொடக்கத்திற்கு சற்று முன்பும் பாலைவனத்தில் கழித்த நாற்பது நாட்களை பின்பற்றுகின்றன. இயேசுவின் நாற்பது நாட்கள் உபவாசம் மற்றும் ஜெபத்தின் நேரமாக இருந்தன, அதைத் தொடர்ந்து அவர் தீயவனின் ஒவ்வொரு சோதனைக்கும் தன்னை உட்படுத்திக் கொண்டார். இந்த சோதனைகள் நாம் தாங்கும் அதே சோதனைகள்தான், அதனால்தான் நம் ஆண்டவர் மிகுந்த பசி மற்றும் தனிமையின் உடல் நிலையில் இருந்தபோது அவற்றைத் தாங்கினார்.

நாம் நமது தவக்காலப் பயணங்களைத் தொடங்கும்போது, எதையாவது விட்டுக்கொடுப்பது, உபவாசம் இருப்பது, இன்னும் வெள்ளிக்கிழமைகளிலும் மாமிசத்தை தவிர்ப்பது, ஜெபத்தில் கூடுதல் நேரத்தைச் செலவிடுவது, நமது தர்மச் செயல்களை அதிகரிப்பது வழக்கம். இந்த தியானங்கள், ஒவ்வொரு படியாக, பாலைவனத்தில் நமது இறைவனுடன் இருக்க உங்களை அழைத்துச் செல்லும், இதன் மூலம் நீங்கள் அவரைப் பின்பற்றி இந்த தவக்காலக் கடமைகளை இன்னும் தீவிரமாக நிறைவேற்ற முடியும். அந்த நாட்களில் இயேசு என்ன செய்தார் என்பதை நீங்கள் சிந்தித்துப் பார்ப்பீர்கள், அவர் உணர்ந்ததை உணர்வீர்கள், அவர் அனுபவித்ததை அனுபவிப்பீர்கள், அவரது செயல்களைப் பின்பற்றுவீர்கள், அவருடன் உபவாசம் இருப்பீர்கள், அவருடன் ஜெபிப்பீர்கள், அவர் எதிர்கொண்ட மற்றும் வென்ற சோதனைகளை எதிர்கொள்வீர்கள்.

இந்த திருநீற்று புதன் கிழமையில், இயேசுவின் பாலைவனப்பயணத்தை சிந்திப்பதில் நேரத்தை செலவிடுங்கள், இதனால் வரும் நாட்களில் நீங்கள் இயேசு பாலைவனத்தில் இருந்த காலத்தின் ஒவ்வொரு விவரத்திலும் கவனம் செலுத்த முடியும். கடவுளின் குமாரனாகிய இயேசு மனித இயல்பை ஏற்றுக்கொண்டார் என்ற பொதுவான கருத்தை சிந்தித்துப் பாருங்கள். பின்னர், நியமிக்கப்பட்ட நேரத்தில், அவர் சுயமாக விதிக்கப்பட்ட பசி, வெப்பம், தனிமை, போராட்டம் மற்றும் சோதனையின் ஒரு காலகட்டத்தில் நுழைய சுதந்திரமாகத் தேர்ந்தெடுத்தார். அவரது நாற்பது நாட்களின் பலனை முழுமையாகப் புரிந்துகொள்ள ஒரு வாழ்நாள் எடுக்கும், நித்தியத்திற்குள் செல்ல வேண்டியிருந்தாலும், பயணத்தில் உங்களை அர்ப்பணித்துக் கொள்ளுங்கள். பாலைவனத்தில் நம் ஆண்டவருடன் நேரத்தைச் செலவிடத் தேவையான அனைத்தையும் செய்யத் தீர்மானியுங்கள். இந்தப் பயணம் எளிதானதாக இருக்காது, அது இனிமையாக இருக்காது என்பதை அறிந்து கொள்ளுங்கள், ஆனால் அது அவசியம் மற்றும் சரியாகவும் நன்றாகவும் வாழ்ந்தால் விதிவிலக்காக பலனளிக்கும். கடவுள் உங்களுக்குக் கொடுத்த பணிக்குத் தயாராக, பாலைவனத்தில் நம் ஆண்டவருடன் இருக்க, இது தான் ஒரே ஒரு சந்தர்ப்பம் நோன்பை ஏற்றுக்கொள்ளுங்கள்.

(CTC இணையம்)

# இயேசுவின் உருமாற்றம்
## (மாற்கு 9 : 2 – 9)


இயேசுவின் உருமாற்றத்தைக் குறித்து ஒத்தமை நற்செய்திகளும் 4ம் நற்செய்தியும் கூறுகின்றன. இவ் உருமாற்றம் ஆண்டவர் இயேசு தனது பணியில் துன்பப்படுவதற்காக எருசலேமை நோக்கிச் செல்வதற்காகத் தன்னைத் தயார்படுத்திய இடமாகும். இத்துயரத்தை ஏற்கும் பணியில் மோசே, எலியா போன்றவர்களின் உற்சாகமூட்டும் பணியும் கடவுளின் வார்த்தைகளும் வலுச்சேர்ப்பவைகளாக காணப்படுகின்றன. இங்கு கடவுளின் தரிசனம் முக்கியமானதாகக் காணப்படுகின்றது ( எசேக்கியேல் 13 : 21, 24 : 15 ).

இயேசுவின் உருமாறுதல் நிகழ்வின் போது சீடர்கள் இயேசுவின் பணியைக் குறித்து தெளிவடைவதை நாம் காண்கின்றோம். குறிப்பாக ஆண்டவர் இயேசு தமது துன்ப அனுபவங்களைப் பற்றி சீடர்களோடு அடிக்கடி பேசியுள்ளார் ( மாற்கு 8 : 30, 31, 9 : 30, 31, 10 : 30, 31 ). இவ் உரையாடல்களின் மத்தியில் பேதுரு இயேசுவை நோக்கி ஆண்டவரே உமக்கு இத்தகைய துன்பங்கள் ஏற்படக்கூடாது என ஆலோசனை கூறிய போதிலும் இயேசு அவற்றை நிராகரித்ததன் முக்கியத்துவத்தை சீடர்கள் இப்போது உணர்ந்திருக்கக் கூடும். எனினும் பேதுரு இயேசுவை நோக்கி உமக்கு ஒரு கூடாரமும் மோசேக்கு ஒரு கூடாரமும் எலியாவிற்கு ஒரு கூடாரமும் அமைத்து மலையிலேயே தங்குமாறு ஆலோசனை கூறுகிறார். இவ் ஆலோசனையை இயேசு நடைமுறைப்படுத்தவில்லை. காரணம், இயேசுவின் பாடுகள் மரணம் உயிரப்பு இவற்றின் மூலம் உலக இரட்சிப்பை தடைசெய்வதாக அமைந்தது.

மாற்றமடையும் நிகழ்வில் கடவுளின் பிரசன்னம் இருந்ததை சீடர்கள் கண்டார்கள் ( வி. பயணம் 34 : 30 ). இயேசு உருமாற்றம் அடைந்ததை சீடர்கள் கண்டு ஆச்சரியப்பட்டார்கள். இதன் ஒளியில் ஒரு தனிமனிதனின் அல்லது சமூகத்தின் மனமாற்றம் அல்லது உருமாற்றம் அவர்களின் செயல்களின் ஊடாக வெளிப்பட வேண்டும். இயேசுவின் மரணத்திற்கும் உயிர்ப்பிற்கும் சாட்சி கூறுவதாக பேதுரு முன் வருவதைப் போல எமது வாழ்விற்கும் பணிக்கும் மக்கள் சாட்சி கூற அழைக்கப்படுகின்றனர்,(தி.பணிகள்.:32).

பரபரப்பான தரிசனத்தின் மத்தியிலும் கடவுளின் குரல் சீடர்களை நோக்கி வருகின்றது. இவர் என் அன்பார்ந்த மைந்தன். இவருக்கு செவி கொடுங்கள் என்பதாகும். இதனை 7 வது வாக்கியத்தில் நாம் காணலாம். பரபரப்பின் மத்தியிலும் அமர்ந்த மெல்லிய கடவுளின் வார்த்தையை கேட்பதற்கு சீடர்கள் ஆயத்தமாகிறார்கள். எமது திருப்பணிகளிலும் அநேக சந்தர்ப்பங்களில் பரபரப்பான வார்த்தைகளும் பதற்றமடைய வைக்கும் சத்தங்களும் எம்மைச் சூழ்ந்துள்ளன. ஆனால் இவற்றின் மத்தியில் வெளிப்படும் மெல்லிய கடவுளின் சத்தத்தை நாம் கேட்பதற்கு தயங்குகிறோம், இல்லையேல் மறுக்கின்றோம். இறைவாக்கினராகிய எலியா பலத்த காற்றின் மத்தியிலும் பேர் இரச்சல்களின் மத்தியிலும் கடவுளைக் காண முற்பட்டார். ஆனால் கணமுடியவில்லை. மாறாக அமர்ந்த மெல்லிய காற்றின் மத்தியில் கடவுளைக் கண்டு அடைந்தார்.

நாங்கள் பரபரப்புடன் கடவுளுக்காக பணி செய்யும்போது கடவுளுடைய சத்தத்தையும் மனிதர்களுடைய சத்தத்தையும் கேட்க மறுக்கின்றோம் என்கிறார். இதன் ஒளியில் எமது பணிகளின் மத்தியில் கடவுளின் சத்தத்திற்கும் மனிதரின் சத்தத்திற்கும் எங்கள் செவிகளைத் திறக்குமாறு உருமாற்ற மலை எமக்கு அழைப்பு விடுக்கின்றது..



# தவக்காலம், மாற்றங்களை விதைக்கும் காலம்

தவக்காலம் நோன்பின் காலம், அருளின் காலம். மனமாற்றத்தின் காலம். நமது பழைய பாவ இயல்பை விடுத்து புதிய இயல்பை அணிந்து கொண்டு புதுவாழ்க்கை வாழ நம்மைத் தூண்டும் காலம். “நமது ஆன்மாவைத் தூய்மைப்படுத்தி, உள்ளத்திற்கு எழுச்சியூட்டி, நம் உடலை ஆவிக்குரியதாக மாற்றும் ஆற்றல் கொண்டது நோன்பு” என்பார், இறையியலாளர் ஹிப்போ நகரத்து புனித அகுஸ்தீன்.

உணவையும், உடல் சார்ந்த தேவைகளையும் ஒறுப்பதல்ல, மாறாக, இழித்துரைத்தல், பழித்துரைத்தல் போன்ற தவறுகளை ஒறுத்து, அதிலிருந்து விலகி வாழவே, நோன்பு நம்மைத் தூண்டுகின்றது என்று கூறுவார் திருத்தந்தை புனித பெரிய லியோ.

இப்படியாக நோன்பு, ஒறுத்தல் என்னும் நற்பண்புகளை நம்மில் வளர்த்து, நாம் இறைவனுடனான உறவில் ஆழப்பட, நமக்கு அறிவுறுத்தும் காலம் தான் தவக்காலம்.

உலகமெங்கும் வாழக்கூடிய கத்தோலிக்க கிறிஸ்தவ மக்களால், 40 நாட்கள் கடைபிடிக்கப்படும் ஒரு காலம் தவக்காலம்.

இறைவேண்டல், தவமுயற்சிகள், தருமம் செய்தல், தன்னொறுத்தல் போன்ற நற்செயல்களை ஊக்குவிக்க பயன்படும் காலம். அதிலும் குறிப்பாக பிறரன்பு செயல்கள், நோன்பு ,செபம் என்னும் மூன்று செயல்களை அதிகமாக வலியுறுத்தும் காலம்.

நமக்காக துன்பங்கள் பட்டு இறந்து உயிர்த்த இயேசுவிற்காக நாம் நம்மை ஒறுத்து மேற்கொள்ளும் தவ நாட்கள் இவை.

## ஏன் தவக்காலம்?

நான்கு வகை பருவ காலங்கள் உலகத்தில் புழக்கத்தில் உண்டு: இளவேனிற் காலம் கோடை காலம், இலையுதிர் காலம், குளிர்காலம். தவக்காலம் இதில் இளவேனிற்ககாலம் என்று அழைக்கப்படும் வசந்த காலத்தில் வருகின்றது. போர்வைக்குள் ஒடுங்கி புகலிடம் தேடிய குளிர்காலம் முடிந்து புதிய இலைகளுடன் புது வாழ்வை தொடங்க மரங்கள் எத்தனிக்கும் காலம். இதுவரை வெறுமையாய் இருந்த தன்னை சிறு இதழ்கள் மூலம் அலங்கரிக்க தொடங்கும் காலம். இன்னும் நான் இருக்கிறேன் என்பதை இவ்வுலகிற்கு அடையாளப்படுத்தும் காலம். மரங்கள் போல நமது வாழ்வும் வசந்தத்தை நோக்கி வண்ண நடை போட வாய்ப்பளிக்கும் காலம் இத்தவக்காலம்.

தவக்காலம் நோன்பின் காலம் அருளின் காலம் மனமாற்றத்தின் காலம். நமது பழைய பாவ இயல்பை விடுத்து புதிய இயல்பை அணிந்து கொண்டு புதுவாழ்க்கை வாழ நம்மை தூண்டும் காலம். கடவுளை முழுமையாக அன்புகூரும் இடம் என்றும், அருளின் காலமாகிய இத்தவக்காலத்தில் பாலைவன அனுபவம் நமக்கு ஏற்படும் அதிலிருந்து நாம் மீண்டு வரவேண்டும் என்று முன்னாள் திருத்தந்தை பிரான்சிஸ் தவக்காலச் செய்தியில் வலியுறுத்தியுள்ளார்.

## இயேசுவின் வாழ்வில் தவம்

இயேசு தன்னுடைய எல்லா செயல்களையும் தொடங்குவதற்கு முன் தனித்திருந்து செபித்தார். தன்னுடைய 12 வயதில் இறைவேண்டலையும் இறைப்பிரசன்னத்தையும் தேடத் தொடங்கிய அவர் இறுதி வரை தவத்தையும் தனிசெபத்தையும் ஒரு போதும் கைவிடவில்லை. பணி தொடங்குவதற்கு செபத்தில் முன் தனித்திருந்தார். புதுமைகள் செய்ய தொடங்கும் முன்னும், செய்து முடித்த பின்னும் இறை செபத்தில் தனித்திருந்தார். தனிமையில் ஒருவருடன் பேசுவதற்கு முன்பும் கூட்டத்தினர்க்கு மத்தியில் பேசும்போதும் தனித்திருந்து தன்னுடைய செப ஆற்றலைப் பெருக்கிக்கொண்டார். இயேசு தான் வாழ்ந்தது போல நம்மையும் வாழச்சொல்கின்றார். அவர் வாழ்ந்து காட்டி விட்டார். நம்மை வாழ அழைக்கின்றார். அருளை அள்ளித் தரும் இத்தவக்காலத்தில் தனிசெபத்திலும் ஒறுத்தலிலும், பிறரன்பு பணிகளிலும் நாம் நம் நேரத்தை செலவிடுவோம். தவக்காலத்தை அருள் தரும் காலமாக மாற்றுவோம்.

ஆக தானம், நோன்பு, செபம் என அனைத்தும் வலியுறுத்துவது அன்பையே. தவக்காலம் அன்பை வலியுறுத்தும் காலம். அன்பில் நிலைத்திருப்போம். அன்பால் நிலைத்திருப்போம். தவக்காலம் என்னும்

வசந்த காலம் வாழ்வில் வளமையை அள்ளித்தரட்டும்.

உண்மை ஒளியை நாம் உணர இறைவன் நமக்கு சில அறிவுரைகளைக் கொடுக்கின்றார். 1. ஆலயம் செல்லுங்கள். 2. நற்செயல் புரியுங்கள். 3. ஒளியை நோக்கி வாருங்கள்.

## 1. ஆலயம் செல்வோம்:

நாமும் பல நேரங்களில் சோதனைகளுக்கு ஆளாகின்றோம். துன்புறுகின்றோம். ஆனால் அத்துன்பத்திற்கு நம்முடைய சூழலையும் நேரத்தையும் உடன்வாழும் சக மனிதர்களையும் காரணம் காட்டி விடுகின்றோம். துன்புற்ற நேரத்தில் ஆலயத்திற்கு சென்றாலும் நம்முடைய மன்றாட்டுகள் புலம்பல்களாகவும் அழுகைகளாகவும் தான் இருக்கின்றனவே தவிர, அவை எதனால் என்று எண்ண மறந்துவிடுகின்றோம். இந்தத் தவக்காலத்தில் ஒறுத்தல்களையும், செப தவங்களையும் மேற்கொள்ளும் நாம், ஆலயம் செல்வதை வழக்கமாக்கிக் கொள்ள வேண்டும். அடிக்கடி செல்லும் இடமே நமது இல்லம். எப்போதாவது சென்றால் அது விருந்தினர் இல்லம். நாம் கடவுளின் பிள்ளைகள் எனில் அவர் வாழும் இல்லம் நமது இல்லம். அனுதினமும் ஆலயம் சென்று நாம் ஆண்டவரின் பிள்ளைகள் என்ற உரிமையை தக்க வைத்துக் கொள்வோம். உண்மை ஒளி நம்மில் தானாக சுடர்விடும்.

## 2. நற்செயல்கள் புரிவோம்:

கடவுள் அன்பும் அருளும் மிக்கவர். அவருடைய பிள்ளைகளாகிய நாமும் அந்த அன்புக்கும் அருளுக்கும் உரிமையுடையவர்கள். அன்பு அருள் இவ்விரண்டையும் நாம் மென்மேலும் வளர்த்துக் கொள்ள நமக்கு மிக உதவியாக இருப்பவை நாம் செய்யும் நற்காரியங்கள். சிலர் தங்களுடைய நற்செயல்கள் பிறரால் பாராட்டப்படவில்லை இரசிக்கப்படவில்லை என்று எண்ணி அதனைத் தொடர்ந்து செய்யாமல் விட்டுவிடுகின்றனர். சூரியன் உதிப்பதையும், மறைவதையும் உலகில் வாழும் எல்லோரும், எல்லா நேரமும் இரசிப்பதில்லை. அதற்காக சூரியன் தன் வேலையை செய்யாமல் இல்லை. நாம் செய்கின்ற நற்செயல்களை இரசிப்பவர்களும் அதை விமர்சிப்பவர்களும் இருக்கும் உலகில் தான் நாம் வாழ்கின்றோம். விமர்சனங்களுக்கு பயந்து வாழ்ந்தால் நல்விளைவுகளை அறுவடை செய்ய முடியாது. **நாம் நற்செயல்கள் புரிவதற்கென்றே இயேசு கிறிஸ்து வழியாக படைக்கப்பட்டிருக்கின்றோம். அதை உணர்ந்து வாழ்ந்தால் உண்மை ஒளி நம் வாழ்வை மகிழ்விக்கும்.**

## 3. ஒளியை நோக்கி வருவோம்:

சிறு பிள்ளைகள் நடை பயிலும் நேரத்தில் தாய், தந்தையர் அக்குழந்தைகளை தரையில் இறக்கி விடுவர். பின் தன்னை நோக்கி வருமாறு கைகளை நீட்டுவர். குழந்தைகள் அம்மா அப்பாவின் முகம் அறிந்து அவர்களை நோக்கி நடையெடுக்கும். தான் நடக்கிறேன் என்பதை விட தன் அம்மா அப்பாவை நோக்கி செல்கின்றோம் என்ற மகிழ்வே அவர்களுக்கு உற்சாகம் அளிக்கும். அப்படியே நடையும் பழகிவிடுவார்கள். பிள்ளைகள் பெற்றோர்கள் மேல் வைக்கும் நம்பிக்கையினால் அவர்கள் வாழ்வு மேம்படுகின்றது. நாமும் பல நேரங்களில் நம் இறைவனால் கீழே இறக்கி விடப்படுகின்றோம். சிலர் அதை, நமது வாழ்வு என்னும் நடைபழக என்று எடுத்துக் கொண்டு, ஒளியாம் இறைவனை நோக்கி நம்பிக்கையோடு செல்கின்றனர். சிலர் இறைவனால் தாங்கள் கைவிடப்பட்டதாக எண்ணிக் கொண்டு அழுது அழுது கண்களால் ஒளியை மறைத்துக் கொள்கின்றனர்.

உண்மைக்கேற்ப வாழ்பவர்கள் ஒளியை நோக்கி வருகின்றனர். தீங்கு செய்பவர்கள் ஒளியை வெறுக்கின்றனர் என்ற நற்செய்தி வாசகத்திற்கு ஏற்ப நமது ஒளி இயேசு என்பதை உணர்வோம். அவர் நமக்காக சிலுவையில் உயர்த்தப்பட்டார். அவரில் நம்பிக்கை கொண்டதால் நாம் நிலைவாழ்வு பெறுகிறோம். கடவுளின் அன்பை முழுமையாக பெறுகின்றோம். நமது தீமை விளைவிக்கக் கூடிய செயல்பாடுகளை மாற்றி இயேசுவின் பாதையில் பயணம் செய்யும் போது, உண்மை ஒளியின் ஒளிக்கீற்றுகளாகின்றோம். ஆலயம் சென்று, நற்செயல்கள் புரிந்து ஒளியை நோக்கி வரும் போது, நாமும் அந்த ஒளியின் சிறு பிம்பங்களாகின்றோம். அப்போது கடவுளாம் ஆண்டவர் நம்மோடும் இருந்து நம்மையும் வழிநடத்துவார். உண்மைக்கேற்ப வாழ்வோம் உண்மை ஒளியின் பிம்பங்களாவோம்

CTC இணையம்)

# கனடா தமிழ் கத்தோலிக்க இணையத்தின் அறிவிற்கும் ஆன்மீகத்திற்குமான ஐரோப்பிய திருப்பயணம்




ஐரோப்பிய திருப்பயணம் வைகாசி (Month of May), மாதம் 02ம் திகதி ஆரம்பித்து வைகாசி மாதம் 22ம் திகதி முடிவடையும். வத்திக்கான் நகரில் ஆரம்பித்து பிரான்ஸ் ஸ்பெயின் ஊடாக வந்து இறுதியில் போர்த்துக்கல் நாட்டில் நிறைவடையும். அடுத்த நாள் 03ம் திகதி வத்திக்கான் நகரை தரிசித்தல் : கத்தோலிக்க திருச்சபையின் உலக புகழ்பெற்ற சரித்திரம் வாய்ந்த அதிசயங்களை தரிசித்தல். பின் பரிசுக்கு சென்று வெள்ளைத்தேவாலயம், நெப்போலியன் நூதனசாலை மற்றும் புனித பெனடிக்ற்றம்மாவின் ஆலயத்தை பார்வையிடல்.

லூர்து நகருக்கு சென்று தூய தண்ணீரில் மூழ்கி எழுந்து குணம் பெறும் நிகழ்வில் பங்கெடுத்தல்.**ஸ்பெயினுக்கு சென்று** புனித அந்தோனியார் தனது குருத்துவ கல்வி பயின்ற குருமடத்தை பார்வையிடல் புனித யாகப்பரின் திருத்தலம் மற்றும் புனித சந்தியாகு தேவாலயம் பார்வையிடல் (Spain) புனித பாத்திமா அன்னையின் தேவாலயம் தரிசித்தல் பின் பற்றிமா மாதாவை தரிசித்துவிட்டு லிஸ்பன் நகருக்கு சென்று புனித அந்தோனியார் தேவாலயத்தை தரிசித்த பின் வைகாசி மாதம் 22ம் திகதி ரொறொன்ரோவுக்கு திரும்புவோம்.

